இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

கடந்த ஆகஸ்ட் 15, சனிக்கிழமை காலையில் இந்தோனேசியாவின் கிழக்கு நுசா தெங்காரா (East Nusa Tenggara) பகுதியில் ஏற்பட்ட 7.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுத்திய பேரழிவைக் கேட்டு, திருத்தந்தை 14-ஆம் லியோ "ஆழ்ந்த துயரமடைந்தார்".

கோலாலம்பூர் மாமறைமாவட்டம் திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் பற்றிய அதிகாரப்பூர்வ அறிவிப்பு

செமினாரிப் பயிற்சிப் பொறுப்பாளர்களின் பரிந்துரையின் பேரிலும், ஆலோசகர் குழுவின் (College of Consultors) ஆலோசனையைப் பின்பற்றியும், பேராயர் மேன்மைமிகு ஜூலியன் லியோ அவர்கள் பின்வரும் சகோதரர்களுக்குத் திருத்தொண்டர் பட்டம் (Order of Deacon) வழங்கத் திருவுளம் கொண்டுள்ளார்:

1. சகோ. லிங்கன் லீ கெங் சுவான் (Bro Lincoln Lee Keng Chuan)
2. சகோ. ஜோசப் டான் யீ பிங் (Bro Joseph Tan Yee Ping)
3. சகோ. டோனி பிங்குவான், OFMCap (Bro Tony Bingkuan, OFMCap)
4. சகோ. ஆல்பர்ட் அற்புதன் த/பெ மணியம் (Bro Albert Arputhan a/l Maniam)

திருநிலைப்படுத்தல் திருப்பலி விவரங்கள்:

- நாள்: செப்டம்பர் 16, 2026 (புதன்கிழமை)
- நேரம்: காலை 10.00 மணி
- இடம்: இறை இரக்கத்தின் தேவாலயம் (Church of the Divine Mercy), ஷா ஆலம், சிலாங்கூர்.

வேட்பாளர்களின் விவரங்கள்:

- சகோ. லிங்கன் லீ கெங் சுவான்: பெட்டாலிங் ஜெயா, அன்னை மரியாவின் விண்மேற்பு Community (Church of the Assumption) பங்கினைச் சேர்ந்தவர். தற்போது பகாங், பெந்தோங், திரு இருதய ஆலயத்தில் (Church of the Sacred Heart) தங்கிப் பணியாற்றி வருகிறார். இவர் தனது விவிலியத்தத்துவப் பயிற்சியைப் பினாங்கு குருத்துவக் கல்லூரியிலும் (2019–2020), இறையியல் பழம்பைச் சரவாக், கூச்சிங், புனித பேதுரு கல்லூரியிலும் (2022–2026) நிறைவு செய்தார்.
- சகோ. ஜோசப் டான் யீ பிங்: கோலாலம்பூர், ஜாலான் பீல், இயேசுவின் திரு இருதய தேவாலயத்தைச் (Church of the Sacred Heart of Jesus) சேர்ந்தவர். தற்போது கோலாலம்பூர், செதாபாக், நல்லாயன் ஆலயத்தில் (Church of the Good Shepherd) தங்கிப் பணியாற்றி வருகிறார். இவர் தனது விவிலியத்தத்துவப் பயிற்சியைப் பினாங்கு குருத்துவக் கல்லூரியிலும் (2020–2021), இறையியல் பயிற்சியைச் சரவாக், கூச்சிங், புனித பேதுரு கல்லூரியிலும் (2022–2026) நிறைவு செய்தார்.
- சகோ. டோனி பிங்குவான், OFMCap: சபா, பெனாம்பாங், புனித மைக்கேல் ஆலயத்தைச் சேர்ந்த இவர், கப்புச்சின் சபை சகோதரர் ஆவார். தற்போது சிலாங்கூர், செராஸ், புனித பிரான்சிஸ் அசிசியார் ஆலய வளாகத்தில் உள்ள கெத்சமனி துறவற மடத்தில் (Gethsemani Friary) தங்கிப் பணியாற்றி வருகிறார். இவர் தனது விவிலிய தத்துவப் பழம்பைக் கூச்சிங் புனித பேதுரு கல்லூரியிலும் (2010–2011), இறையியல் பழம்பைப் பிலிப்பைன்ஸ், தாகாய்தாயில் உள்ள டீவைன் வேர்ட் செமினாரியிலும் (2018–2019 & 2022–2023) மேற்கொண்டார்.
- சகோ. ஆல்பர்ட் அற்புதன் த/பெ மணியம்: போர்ட் கிள்ளான், புனித அன்னமாள் (St Anne) பங்கினைச் சேர்ந்தவர். இவர் தனது விவிலியத்தத்துவப் பயிற்சியைப் பினாங்கு குருத்துவக் கல்லூரியிலும் (2017–2018), தொடர்ந்து சரவாக், கூச்சிங், புனித பேதுரு கல்லூரியிலும் (2020–2021) மேற்கொண்டார். பின்னர் தனது இறையியல் பழம்பைச் இலங்கை, கண்டி நகரிலுள்ள 'அவர் லேடி ஆஃப் லங்கா' தேசிய செமினாரியில் (2024–2026) நிறைவு செய்தார்.

திருஅவைச் சட்ட அறிவிப்பு (Canon Law Notice):

திருஅவைச் சட்டம் 1051 & 2-ன் படி, மேற்கண்ட சகோதரர்களின் தகுதி மற்றும் நற்சான்றை உறுதி செய்யவே இந்த பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இவர்களில் எவருக்கேனும் திருநிலைப்படுத்தப்படுவதில் திருஅவைச் சட்ட ரீதியான தடைகளோ (Canonical Impediments) அல்லது பிற தீவிரமான தடைகளோ இருப்பதாக யாராவது அறிந்தால், திருஅவைச் சட்டம் 1043-ன் படி, தாமதிக்காமல் தங்கள் பங்குத்தந்தைக்கோ, மாமறைமாவட்ட தலைமைச் செயலகத்திற்கோ (Chancery) அல்லது பேராயருக்கோ தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தகவல்களைத் தலைமைச் செயலகத்தின் மின்னஞ்சல் முகவரிக்கு chancery@archkl.org அனுப்பலாம்.

இறைமக்களுக்குச் சேவை செய்வதற்கும் திருத்தொண்டர் பணிக்கும் ஆயத்தமாகும் இந்த வேட்பாளர்களை நமது ஜெபங்களினாலும் ஆதரவினாலும் தாங்குவோம். இறைவன் இவர்களது அழைத்தலை உறுதிப்படுத்தி, கிறிஸ்துவிடமும் அவரது திருஅவையிடமும் உள்ள அன்பை ஆழப்படுத்தி, கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் உண்மையுள்ள ஊழியர்களாகப் பணியாற்ற இவர்களுக்கு தாராள மனதை வழங்க இறைவனைப் பிரார்த்திப்போம்.

Fr Dr Clarence Devadass
Chancellor Archdiocese of Kuala Lumpur, August 11, 2026

இந்தோனேசிய நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் திருத்தந்தை 14-ஆம் லியோவின் அனுதாப ஜெபம்



வத்திகான் வெளியுறவுச் செயலர் கார்டினல் பீட்ரோ பரோலின் வழியாக அனுப்பப்பட்டுள்ள செய்தித் தபாலில், ஆகஸ்ட் 15 அன்று இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் திருத்தந்தை 14-ஆம் லியோ (Pope Leo XIV) தனது "ஆன்மீக ஒருமைப்பாட்டையும், அன்பின் நெருக்கத்தையும்" உறுதிப்படுத்தியுள்ளார். மேலும், அங்கு நடைபெற்று வரும் நிவாரண மற்றும் மீட்புப் பணிகளுக்குத் தனது ஆதரவையும் அளித்துள்ளார்.

கடந்த ஆகஸ்ட் 15, சனிக்கிழமை காலையில் இந்தோனேசியாவின் கிழக்கு நுசா தெங்காரா (East Nusa Tenggara) பகுதியில் ஏற்பட்ட 7.7 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்படுத்திய பேரழிவைக் கேட்டு, திருத்தந்தை 14-ஆம் லியோ "ஆழ்ந்த துயரமடைந்தார்".

முதற்கட்ட தகவல்களின்படி 53 பேர் உயிரிழந்துள்ளனர், 135 பேர் காயமடைந்துள்ளனர், மேலும் 13,000 பேர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

என்டே (Ende) மறைமாவட்ட பேராயர் பவுலஸ் புடி கிளெடன் அவர்களுக்கு, வத்திகான் வெளியுறவுச் செயலர் கார்டினல் பீட்ரோ பரோலின் கையொப்பமிட்டு அனுப்பிய செய்தித் தபாலில், திருத்தந்தை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: "இந்த இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்டு, குறிப்பாக இடம்பெயர்ந்தும் காயமடைந்தும் துயருறும் மக்கள் அனைவருக்கும் எனது ஆன்மீக ஒருமைப்பாட்டையும் ஜெபத்தின் வழியாக என் அன்பின் நெருக்கத்தையும் உறுதிப்படுத்துகிறேன்."

மறைமாவட்ட மற்றும் அரசு அதிகாரிகள் தொடர்ந்து செய்து வரும் "மனிதநேய உதவிகளுக்கு" திருத்தந்தை தனது ஊக்கத்தைத் தெரிவித்ததுடன், "மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அவசரகாலப் பணியாளர்களுக்காகவும்" ஜெபிப்பதாகக் கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் ஆன்மாக்களை "எல்லாம் வல்ல இறைவனின் பேரன்பிலும் இரக்கத்திலும்" ஒப்படைத்து, துயருறும் அனைவருக்கும் இறைவனின் ஆறுதலும் நம்பிக்கையும் கிடைக்க ஆசீர்வதித்துள்ளார்.

பெரும் உயிர் மற்றும் பொருள் சேதம்

புளோரஸ் (Flores) தீவில் முதல் முதலாக 7.7 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியதைத் தொடர்ந்து அன்று நாள் முழுவதும் பல நில அதிர்வுகள் (aftershocks) ஏற்பட்டன. சில மணி நேரங்களுக்குப் பிறகு, சுமத்ரா (Sumatra) தீவிலும் 6.9 ரிக்டர் அளவில் மற்றொரு நிலநடுக்கம் ஏற்பட்டது.

உயிர் இழப்புகளுடன் மட்டுமல்லாமல், இந்த நிலநடுக்கங்கள் வீடுகளுக்கும் பொதுக் கட்டமைப்புகளுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளன.

இந்தோனேசியாவின் தேசிய பேரிடர் மேலாண்மை முகமையின் கூற்றுப்படி, 900-க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலுமாக அழிந்துள்ளன, மேலும் 450 வீடுகள் சேதமடைந்துள்ளன. பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் தேவாலயங்கள் உட்பட குறைந்தது 167 பொதுக் கட்டிடங்கள் பயன்படுத்த முடியாத அளவிற்குப் பாதிக்கப்பட்டுள்ளன.

வீடுகளை இழந்து இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் தற்காலிக நிவாரண முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

தமிழாக்கம் ஹெரால்டு

மேற்குக்கரையில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரத் திருத்தந்தை மீண்டும் கோரிக்கை

16 ஆகஸ்ட்டு ஞாயிற்றுக்கிழமை ஜெப உரையின் முடிவில், மேற்குக்கரையில் (West Bank) வாழும் பாலஸ்தீன மக்களுக்கு எதிராக நடத்தப்படும் வன்முறைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று திருத்தந்தை 14-ஆம் லியோ (Pope Leo XIV) வேண்டுகோள் விடுத்தார். மேலும் விளையாட்டு நிகழ்வுகள் அமைதிக்கும் சகோதரத்துவத்திற்கும் ஒரு சான்றாக அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததோடு, போலந்து நாட்டின் பியேகாரி சிலான்ஸ்கி (Piekary Śląskie) திருத்தலத்திற்குப் திருப்பயணம் மேற்கொண்ட பக்தர்களுக்கும் தனது சிறப்பு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேற்குக்கரையில் உள்ள பாலஸ்தீன மக்களுக்கு எதிராகத் தொடர்ந்து நடத்தப்படும் வன்முறைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். மேலும், நீதியான மற்றும் நிலையான அமைதியை ஏற்படுத்தவும், இரு-நாடு தீர்வை (Two-State Solution) நோக்கிய முன்னேற்றத்தை உறுதி செய்யவும்" சர்வதேச சமுதாயத்திற்கு அவசர அழைப்பு விடுத்தார்.

புனித பூமி (Holy Land) அமைதிக்காக, பாதுகாப்பான மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளின் அடிப்படையிலான 'இரு-நாடு தீர்வு' மட்டுமே ஒரே நீதியான மற்றும் முறையான வழி என்பதில் திருப்பீடம் (Holy See) உறுதியாக உள்ளது.

அமைதிக்கும் சகோதரத்துவத்திற்கும் விளையாட்டு ஒரு சான்று.

வாரம் தோறும் வழங்கும் த்ரிப்பாத ஜெப உரையில், மத்திய தரைக்கடல் விளையாட்டுப் போட்டிகள் (Mediterranean Games) தொடங்குவதைத் திருத்தந்தை நினைவு கூர்ந்தார். ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கும் இப்போட்டிகள், இந்த ஆண்டு தெற்கு இத்தாலியில் உள்ள தராந்தோ (Taranto) நகரில் நடைபெறுகின்றன.

வத்திகானின் அதிகாரப்பூர்வ விளையாட்டு அமைப்பான 'அத்லெட்டிக்கா வத்திகானா' (Athletica Vaticana) சார்பாக நான்கு வீரர்கள் இதில் பங்கேற்கின்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டிகள் "இப்பகுதி மக்களிடையேயும், உலகம் முழுவதிலும் அமைதியையும் சகோதரத்துவத்தையும் வளர்க்கும் ஒரு அடையாளமாக அமைய வேண்டும்" என்று திருத்தந்தை தனது விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். லூக் 2:51

பினாங்கு மறைமாவட்ட சிறைச்சாலை பணிக்குழு



கடந்த 15 நாள் ஆகஸ்டு 2026, கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் மரியாளின் விண்ணேற்பு நாளில் அருள்பணியாளர் டெஸ்மன் ஜேசன் அவர்கள் திருப்பலியைக் கொண்டாடினார்.

இந்த சிறப்பு திருப்பலியில் 10 ஆண்டுகள் சிறைச்சாலையிலிருக்கும் சகோதரர்கள் சகோதரிகளுக்கும் இயேசுவைப் பற்றிய மறைப்போதனைச் செய்த 5 பணியாளர்களுக்கும் அருட்பணி டெஸ்மன் ஜேசன் அவர்கள் சான்றிதழ் வழங்கி சிறப்புச் செய்தார். 'சிறையில் இருந்த என்னைக் காண வந்தாயா?' மத் 25:39, என கிறிஸ்து இயேசு கேள்வி எழுப்பியதை நினைவுக்கூர்ந்து, தம்மை குற்றவாளியாகப் பார்க்கும் இச்சமூகத்தினரிடையே சிறைச்சாலை ஊழிய சகோதர சகோதரிகள் தவறாமல் சிறையிலிருக்கும் சகோதர சகோதரிகளைச் சென்று கண்டு இறைவார்த்தையைப் பகிர்ந்துவருகின்றனர்.

முழுவில்லா வாழ்வு தருபவரும், மன்னிப்பவரும், நமது வாழ்க்கையை மாற்றுபவருமான இயேசு ஆண்டவர் நம்மோடு என்றென்றும் உள்ளார் என ஆறுதலோடு நம்பிக்கையும் ஏற்படுத்தும் இந்த ஊழியர்களுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்திய அருட்பணி டெஸ்மன், கரடு முரடான இந்த ஊழியப் பாதையிலே இன்னும் உட்சாகத்துடன் பணிய செய்ய அழைப்பு விடுத்தார்.

லூர்ஸ்நாதன், பேட்ரிக் முத்து, எலிசபெத்,ஜேன் சந்தனசாமி ஆகியோருக்கு எங்களின் இதயம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கிறிஸ்துவின் அன்பு, நம்பிக்கை,இரக்கம், பரிவை அவர்களுடன் பகிர்ந்து கொண்ட பணியாளர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகள். தங்கள் பணியை தொடர்ந்து அன்பிலும் விசுவாசத்துடன் செய்ய இறைவன் அவர்களுக்கு பலனையும் ஆசிரையும் என்றென்றும் வழங்குவாராக.

புனித மெக்சிமில்லியன் கோலபே எங்களுக்காக மன்றாடும்

வெறுப்பு அரசியலை மலேசியா நிராகரிக்க வேண்டும்

நமது நாட்டின் 69-வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் வேளையில், மலேசிய பௌத்த, கிறிஸ்தவ, இந்து, சீக்கிய மற்றும் தாவோயிச கலந்தாய்வு மன்றம் (MCCBCHST), "நாம் உண்மையிலேயே சுதந்திரத்தின் உண்மையான மதிப்புகளின்படிதான் வாழ்கிறோமா?" என ஒவ்வொரு மலேசியரையும் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க அழைப்பு விடுக்கிறது.

நாம் பெற்ற சுதந்திரம் என்பது நம்மிடையே பிரிவினையை உண்டாக்குவதற்கான உரிமம் அல்ல. ஆனால், சமீபகாலமாக அரசியலில் இன மற்றும் மத அடையாளங்களை வைத்து மக்களைப் பிரிக்கும் ஆபத்தான போக்கு அதிகரித்து வருகிறது. உடன் வாழும் சக குழுமக்களைச் சகோதரர்களாகக் கருதாமல், எதிரிகளாகவும் பயத்திற்குரியவர்களாகவும் சித்தரிப்பது மிகவும் ஆபத்தானது.

கத்தோலிக்க திருஅவை கற்பிப்பது போல, இறைவன் அனைத்து மனிதர்களையும் ஒரே குடும்பமாகவே படைத்துள்ளார். எனவே, "பிற மதத்தவரோ அல்லது பிற இனத்தவரோ இஸ்லாமியத்திற்கு எதிராகச் செயல்படுகிறார்கள்" என்ற பொய்யான குற்றச்சாட்டுகளையும் வெறுப்பு பேச்சுகளையும் பரப்புவது முற்றிலும் தவறானதும்; சமூக அமைதியைக் குலைப்பதாகும்.

பெரும்பாலான மலேசியர்கள் சாதி, மத பேதமின்றி அமைதியாகவும், தங்களது குடும்பங்களைப் பாதுகாப்பாக வளர்க்கவும், தங்கள் நம்பிக்கைகளின்படி வாழவும் மட்டுமே விரும்புகிறார்கள்.

மாறாக, அரசியல் ஆதாயத்திற்காக மதத்தையோ அல்லது இனத்தையோ ஆயுதமாகப் பயன்படுத்துவது, தேசிய ஒற்றுமையை மட்டுமல்லாமல், மதத்தின் புனிதத்தையும் சீரழித்துவிடும்.

வெறுப்பையும் அச்சத்தையும் விதைக்கும் அரசியல் ஒருபோதும் ஒரு பலமான நாட்டை உருவாக்காது. இது ஊழலை எதிர்த்துப் போராடுதல், நல்ல கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவ வசதி மற்றும் வாழ்வாதாரச் செலவுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற நாட்டின் உண்மையான வளர்ச்சிக்கான கவனத்தைத் திசைதிருப்பி விடுகிறது.

மலேசியாவின் பலம் என்பது எல்லாரையும் ஒரே மாதிரியாக மாற்றுவதில் (Assimilation) இல்லை; மாறாக, அவரவர் கலாச்சாரத்தையும் நம்பிக்கையையும் மதித்து, கூட்டாட்சி அரசியலமைப்புச் சட்டம் மற்றும் 'ருக்குன் நெகாரா' (Rukun Negara) கொள்கைகளின் கீழ் அனைவரும் ஒன்றிணைந்து வாழும் கூட்டமைப்பில் (Integration) தான் உள்ளது.

எனவே, MCCBCHST அமைப்பு பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கிறது:

1. அரசியல் தலைவர்கள்: இன, மத வெறுப்புப் பிரச்சாரங்களைக் கைவிட்டு, நாட்டின் வளர்ச்சி, நேர்மை மற்றும் நல்வாழ்வுக்கான கொள்கைகளில் அதிக நாட்டம் கொள்ள வேண்டும்.
2. சட்ட அமலாக்கத் துறை: வெறுப்பைத் தூண்டுபவர்கள் யாராக இருந்தாலும், எவ்விதபட்சபாதமுமின்றி சட்டத்தின் முன் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
3. மதத் தலைவர்கள்: அனைத்து மதங்களும் போதிக்கும் கருணை, நீதி, அமைதி மற்றும் மனித கண்ணியத்தை மக்களிடையே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.
4. ஒவ்வொரு மலேசியரும்: பொய்களையும், பயத்தையும், அவதூறுகளையும் நிராகரித்து, பிரிவினைக்குக் கருவியாக மாறாமல் ஒற்றுமையைக் காக்க வேண்டும்.

சுதந்திரம் என்பது வெறும் கடந்த கால நிகழ்வு அல்ல; அது ஒவ்வொரு தலைமுறையிடமும் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு. நாட்டின் மீது நாம் வைத்துள்ள அன்பு என்பது சத்தமிடுவதில் இல்லை; மாறாக, நாம் ஒருவரையொருவர் எவ்வாறு நேசிக்கிறோம், மதிக்கிறோம் என்பதில்தான் உள்ளது.

இந்த மெர்டேக்கா நாளில், பிரிவினையை விட்டு ஒற்றுமையையும், பொய்களை விட்டு உண்மையையும், பயத்தை விட்டு நம்பிக்கையையும் தேர்ந்தெடுப்போம்.

இனிய சுதந்திர தின வாழ்த்துகள்! - MCCBCHST

பொதுக்காலம் 22ஆம் வாரம், ஞாயிறு

30 ஆகஸ்டு 2026

எரேமியா 20: 7-9
உரோமை 12: 1-2
மத்தேயு 16: 21-27

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 22 ஆம் ஞாயிறுவில் இணைகிறோம். எச்சூழலிலும் நம்மையே அர்ப்பணித்து, சிலுவையை ஏற்று கிறிஸ்துவைப் பின்பற்ற அழைக்கப்படுகிறோம்.

முதல் வாசகத்தில் எரேமியா, கடவுளுடைய வார்த்தையை அறிவித்ததற்காக பல துன்பங்களையும் அவமானங்களையும் சந்திக்கிறார். ஒரு கட்டத்தில், "இனி நான் அவரைப் பற்றி பேசமாட்டேன்" என்று நினைக்கிறார். ஆனால் கடவுளுடைய வார்த்தை அவரது உள்ளத்தில் எரியும் நெருப்பைப் போல இருப்பதால், அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை. இது, துன்பங்கள் வந்தாலும் கடவுளுடைய அழைப்பை விட்டுவிடக்கூடாது என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இரண்டாவது வாசகத்தில் புனித பவுல், "உங்கள் உடல்களை உயிருள்ள பலியாகக் கடவுளுக்கு அர்ப்பணியுங்கள்" என்று அழைக்கிறார். நமது வாழ்க்கை, நேரம், திறமைகள், குடும்பம் மற்றும் செயல்கள் அனைத்தும் கடவுளுக்கான அர்ப்பணிப்பாக இருக்க வேண்டும். உலகத்தின் போக்கைப் பின்பற்றாமல், நமது மனதைப் புதுப்பித்து கடவுளுடைய விருப்பத்தைத் தேட வேண்டும் என்று பவுல் அடிகள் வலியுறுத்துகிறார்.

இயேசுவோ, நமக்கு மிகத் தெளிவான அழைப்பை விடுக்கிறார். ஆம், நாம் ஒவ்வொருவரும் நம்மையே மறுத்து, நம் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின் செல்ல வேண்டும் என்கிறார். இங்கு, கிறிஸ்துவைப் பின் செல்வது என்பது தியாகம், மன்னிப்பு, அன்பு, பொறுமை ஆகியவற்றின் வழியாக சிலுவையை ஏற்றுக்கொள்வதாகும்.

சிலுவையைச் சுமந்து கொண்டு செல்வது என்பது 'சிலுவை மரத்தைத் தோளில் சுமந்து நடப்பதென்று பொருள் அல்ல. அது சோதனைகள், அவமானங்கள் மற்றும் துன்பங்களை மகிழ்ச்சியுடன் தாங்கிக்கொண்டு, சுயநலத்தை வெறுத்து, இறைவனின் கட்டளைகளுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்து தினசரி வாழ்வின் சவால்களை எதிர்கொள்வதாகும்.

தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர், (மத் 10:38) என்கிறார் இயேசு. இந்தச் சிலுவையைக் குறித்தே, பவுல் மேன்மை பாராட்டினார். அவர் தன் சிலுவையை அனுபவ ரீதியாகச் சுமந்தவர். பல நெருக்கங்கள் நிந்தைகள் மத்தியிலும் கிறிஸ்துவின் சாட்சியைக் காத்துக்கொள்வதில் அவர் அடைந்த பாடு துன்பம் கணக்கற்றவை. ஆனால் அவர் கிறிஸ்துவின் பாதையைவிட்டு பின்வாங்கிடவில்லை. அவரைப் போல், வாழ்க்கையில் எழும் வேதனைகள், விமர்சனங்கள் மற்றும் சவால்களைத் தளராமல் சகித்துக்கொள்ள வேண்டும்.

அது நமது அன்றாட வாழ்வில் நமது கடவுளைப் பின்பற்றுவது எளிதான பாதையாக இருக்காமல் இருக்கலாம்; ஆனால் அதுவே அர்த்தமுள்ள பாதையாகும். எரேமியாவைப் போல சிரமங்களில் நிலைத்திருப்போம். பவுலைப் போல நம்மை கடவுளுக்கு அர்ப்பணிப்போம். இயேசுவைப் போல சிலுவையின் வழியாக அன்பைத் தேர்ந்தெடுப்போம். இன்ப துன்பங்களை சுமந்தவாறு கிறிஸ்துவைப் பின்பற்றுவதே கிறிஸ்தவ வாழ்க்கை.

நிறைவாக, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பொறுப்பற்ற ஆடம்பர வாழ்க்கை அல்ல; அது ஒரு சீரிய தீர்மானம். அது ஒழுக்கமும் தியாகமும் நிறைந்த வாழ்க்கை, பாடுகளையும் பிரச்சினைகளையும் கண்டு நாம் பயந்து பின்வாங்க நாம் சாதாரணமானவர்கள் அல்ல. நாம் அன்பான தந்தையின் பிள்ளைகள். அவரது மன்னிப்பைப் பெற்றவர்கள். அவருக்காய் பணிசெய்ய அழைக்கப்பட்டவர்கள். 'உலகம் என் பின்னே, சிலுவை என் முன்னே' என பாடினால் போதாது. கிறிஸ்துவோடுள்ள உறவைப் புதுப்பித்துக்கொள்ளுவோம். உலக ஆசாபாசங்களைப் பிடித்துக்கொண்டு சிலுவை சுமக்கின்றோம் என்று சொன்னால் அது ஏற்கத்தக்கது அல்ல.

ஆர்.கே. சாமி, சிரம்பான்

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015